# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 12122 /SCIC/2023**

திரு M. நூருல்லாகான் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக செயற்பொறியாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரை ரோடு,
பாலக்கரை, திருச்சி. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கு ஏற்கனவே 13.03.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> “ **இனம் 1ல் மனுதாரர் குறிப்பிடும் விண்ணப்பமானது தங்கள் அலுவலகத்தில் பெறப்படவில்லையென்று பொதுத் தகவல் அலுவலர்**

**சார்பில் ஆஜரான அலுவலர் தெரிவித்தார். இருப்பினும் மனுதாரர் ஆணையத்திற்கு மேற்படி விண்ணப்பத்தினை இன்று அனுப்பியுள்ளார், அவ்விண்ணப்ப நகலானது இன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலரிடம் ஆணையத்தால் வழங்கப்பட்டது. அவ்விண்ணப்பத்தின் மீது பொதுத் தகவல் அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டு அதுகுறித்த அறிக்கையினை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், அத்தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினையும் 03.04.2025 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**

**மேலும் மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கும், சட்டப்பிரிவு 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவிற்கும் உரிய காலத்தில் தகவல்கள் வழங்காத காரணத்திற்காக அப்போது பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பொறுப்பிலிருந்த திரு P. செல்லப்பிள்ளை, அவர்மீது சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 03.04.2025 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**

**2.** அதனடிப்படையில் இன்று (03.04.2025) பொதுத் தகவல் அலுவலர் திருமதி பி. அனந்தலட்சுமி, எஸ்டேட் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம், பாலக்கரை, திருச்சி ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க இனம் 1க்கான தகவல்கள் 21.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து, அக்கடித நகல்களையும், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதனை ஆணையம் ஏற்கிறது.

3. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கும், சட்டப்பிரிவு 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவிற்கும் உரிய காலத்தில் தகவல்கள் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பொறுப்பிலிருந்த திரு P. செல்லப்பிள்ளை, என்பவரிடம் காரண விளக்கம் ஆணையத்தால் கோரப்பட்ட நிலையில், மேற்படி நபர் 31.05.2024 அன்று பணிஓய்வு பெற்றுவிட்டதாக பொதுத் தகவல் அலுவலர் இன்று ஆணையத்தின் முன்

தெரிவித்தார். **எனவே, மேற்படி நபர் மீதான காரண விளக்கம் கோரும் நடவடிக்கையானது ஆணையத்தால் கைவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 12122/SCIC/2022</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
எஸ்டேட் அலுவலர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம்,
மதுரை ரோடு, பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8

திரு P. செல்லப்பிள்ளை,
கண்காணிப்பாளர்/
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மேல்முறையீட்டு அலுவலர் (பொ),
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம்,
மதுரை ரோடு, பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8

**<u>மனுதாரர்:-</u>**
திரு M. நூருல்லாகான்,
த/பெ முகமத்கான்,
பிளாட் எண்.30, கதவு எண்.21,
ஆசாத் நகர், 2வது தெரு,
மேல்தளம், சாத்தனூர் ரோடு,
கே.கே.நகர், திருச்சிராப்பள்ளி 620 021

**நகல்**
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5 காமராஜர் சாலை,
சேப்பாக்கம், சென்னை 600 005

Copy to: File TK/PS